எழுத்தாளர் அ.முத்துலிங்கம் பற்றியொரு நனவிடை தோய்தல்!

Written by - முருகபூபதி -
Sunday, 18 March 2018 08:50 - Last Updated Sunday, 18 March 2018 08:59

- தமிழ் இலக்கிய உலகில் அறுபது ஆண்டுகாலமாக எழுத்தூழியத்தில் ஈடுபட்டுவரும் கனடாவில் வதியும் மூத்த எழுத்தாளர் அ.முத்துலிங்கத்தின் எழுத்துலகத்தைக் கொண்டாடும் விழா எதிர்வரும் ஏப்ரில் மாதம் கனடாவில் நடக்கவிருக்கிறது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் *(2009* மார்ச் *)* மல்லிகை இதழின் முகப்பை அலங்கரித்த முத்துலிங்கம் பற்றி அதே இதழில் எழுதிய பதிவு, மீண்டும் வாசகர்களுக்கு - முருகபூபதி -

---

ஒரு நல்ல சிறுகதையைப் படிக்கும் வாசகனுடைய சிந்தனையானது கதை முடிந்த பின்னும் சிறிது தூரம் ஓடவேண்டும். சிறுகதையின் முழுமை அவன் சிந்தனை ஓட்டத்தில்தான் நிறைவுபெற வேண்டும். ஒரு உண்மையான சிறுகதை அது முடிந்த பிற்பாடுதான் தொடங்குகிறது. - இப்படிச் சொல்லியிருப்பவர் தன்னை ஒரு இலக்கிய விமர்சகராகவோ அல்லது இலக்கியப் பேராசிரியராகவோ அறிமுகப்படுத்திக்கொண்டவர் அல்ல. ஒரு குடும்பத்தில் திடீரெனக் காணாமல் போனவர் திடுதிப்பென சுமார் இருபத்தியைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் விந்தையான இயல்புகளுடனும் கருத்தையும் கவனத்தையும் ஈர்க்கும் தோற்றத்துடனும் திரும்பிவந்து இதோ நான் இன்னமும் இருக்கின்றேன் எனச் சொல்லும்போது அந்தக் குடும்பத்தினரிடம் தோன்றும் வர்ணிக்க வார்த்தைகளைத் தேடும் பரவசம் இருக்கிறதே அது போன்றதுதான் நண்பர் அ.முத்துலிங்கம் அவர்களின் இலக்கிய மறுபிரவேசம் என்று நினைக்கின்றேன்.

சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் நான் இலக்கிய உலகிற்குள் பிரவேசித்த 1970 காலப்பகுதியில் ஒரு மாலைவேளையில் கொள்ளுப்பிட்டி தேயிலைப் பிரசார மண்டபத்தில் நடந்த ஒரு இலக்கியநிகழ்வில் முன் வரிசையில் அமர்ந்திருந்த ஒருவரைச் சுட்டிக்காட்டி அவர்தான் அக்கா கதைத் தொகுதி எழுதிய அ.முத்துலிங்கம் என்று ஒரு இலக்கிய நண்பர் சொன்னார். எனினும் அன்று அவருடன் பேசும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. 'அக்கா' தொகுதியும் படிக்கக் கிடைக்கவில்லை. அதன் பின்னர் முத்துலிங்கம் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அவரையும் அவரது அக்காவையும் தேடியும் கண்களுக்குத் தென்படாமல் மறைந்து விட்டார்கள்.

1987 இல் நானும் அவுஸ்திரேலியாவுக்கு வந்துவிட்டபின்னும் தொடர்ந்து எழுதிக்கொண்டிருந்தேன். எதிர்பாராமல் எனது வீட்டு முகவரிக்கு பாகிஸ்தானிலிருந்து ஒரு புத்தகப் பார்சல் வந்தது. அனுப்பியிருந்தவர். முத்துலிங்கம். புத்தகம் 'திகடசக்கரம்' கதைத் தொகுதி. உடனே பதில் எழுதினேன். அவரிடமிருந்து பதில் இல்லை. 'திகடசக்கர'த்தை வைத்துக்கொண்டு, மீண்டும் தேடுதல் படலம். ஐ.நா. அதிகாரியாக அவர் உலகம் சுற்றிக்கொண்டிருப்பதாக நான் விசாரிப்பவர்களெல்லாம் சொன்னார்களே தவிர, சரியான தகவலைத் தரவில்லை. என்னாலும் அவரது சரியான இருப்பிடத்தையோ முகவரியையோ கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது. அவர் தமது

1 / 4

எழுத்தாளர் அ. முத்துலிங்கம் பற்றியொரு நனவிடை தோய்தல் !

Written by - முருகபூபதி -
Sunday, 18 March 2018 08:50 - Last Updated Sunday, 18 March 2018 08:59

உத்தியோகத்திலிருந்து நிரந்தரமாக ஓய்வுபெறும் வரையில் காத்திருக்க வேண்டியிருந்தது. எனினும், என்னைப்போன்ற வாசகர்களை காத்திருக்கச்செய்யாமல் தமது கதைகள், கட்டுரைகள் மூலம் இலக்கிய மறுபிரவேசத்துடன் அறிமுகமாகிக்கொண்டிருந்தார்.

கனடாவிலிருக்கிறார் என்பதை அறிந்து தொடர்புகொள்வதற்கு 2007 ஆம் ஆண்டு வரையில் காத்திருந்தேன் என்றால் எவரும் நம்பமாட்டார்கள். கனடாவுக்குச்சென்றும் அவரைச்சந்திக்கமுடியாமல் போய்விட்டது. அமெரிக்காவிலிருந்து எனக்கு 2008 ஆம் ஆண்டு பிறந்ததும் முதல் வாழ்த்தும் நீண்ட உரையாடலையும் தந்தவர் முத்துலிங்கம். மின்னஞ்சலும் தொலைபேசியும் தொலைத்துவிட்ட நீண்ட பெரிய இடைவெளியை நிரப்பிவிட்டன. தமிழகத்தில் தீராநதி, ஆனந்தவிகடன், உயிர்மை, வார்த்தை உட்பட பல இணைய இதழ்களிலெல்லாம் எழுதுகிறார் ஆனால் ஈழத்து இதழ்களில் எழுதுகிறார் இல்லையே என்ற கவலையை சிலர் தெரிவிக்கத்தொடங்கியுள்ள சூழலில், மல்லிகை ஆசிரியர் கேட்டதன் பிரகாரம் இந்த ஆக்கம்.

1937 இல் இலங்கையில் வடமாகாணத்தில் கொக்குவில் கிராமத்தில் ஏழு பிள்ளைகளைக்கொண்ட பெரிய குடும்பத்தில் ஐந்தாவது பிள்ளையாக பிறந்த முத்துலிங்கம், 1960 இல் இலக்கியப்பிரவேசம் செய்தார். நன்கு ஆண்டுகளில் (1964) முதலாவது கதைத்தொகுதி அக்காவை தந்தவர், மீண்டும் 1995 இல்தான், அதாவது, இருபத்தியொரு வருடங்களின் பின்னர் திகடசக்கரம் கதைத்தொகுதியை தருகிறார். மீண்டும் எழுதுவதற்கு தூண்டுகோலாக இருந்த காரணி என்ன? என்று கேட்டேன்.

“ஒரு நாள் தற்செயலாக ஒரு சஞ்சிகையை புரட்டியபோது நான் எங்கே விட்டேனோ அங்கேயே தமிழ்ச் சிறுகதை நின்றது. ஆகவே திரும்பவும் நுழைவது சுலபமாக அமைந்தது” என்றார். அவரது நுழைவு பயன்மிக்கது. தமிழ் வாசகர்களுக்கு புதிய அனுபவத்தை வழங்கியது. தமிழ் இலக்கிய உலகிற்கு புதிய வரவுகளைத் தந்தது. திகடசக்கரத்தைத் தொடர்ந்து, வம்சவிருத்தி (கதைகள்-1996)- வடக்கு வீதி (கதைகள்-1998)- மகாராஜாவின் ரயில் வண்டி (கதைகள்-2001)- அ.முத்துலிங்கம் கதைகள் (2001)- அங்கே இப்ப என்ன நேரம்? (கட்டுரைகள்)- கடிகாரம் அமைதியாக எண்ணிக்கொண்டிருக்கிறது (தொகுப்பாசிரியர்) வியத்தலும் இலமே (நேர்காணல்கள்) பூமியின் பாதி வயது (கட்டுரைகள்) உண்மை கலந்த நாட்குறிப்புகள் (நாவல்) முதலானவற்றை தந்திருப்பதுடன் இல்லாமல் அயராமல் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் முத்துலிங்கம் பவளவிழாவை நெருங்கிக்கொண்டிருக்கின்றார்.

தமிழ் இலக்கியச்சூழலில் பல விந்தைகளை அண்மைக்காலத்தில் நிகழ்த்தியிருப்பவர் முத்துலிங்கம் என்பதனால் ஈழத்து தமிழக வாசகர்கள் மத்தியில் மிகுந்த கவனத்திற்குள்ளாகியிருக்கிறார். ஊடகங்கள் உருவாக்கிய எழுத்தாளர்களும் வாசகர்களும் இருக்கிறார்கள். அதுபோன்று புதிதாக வாசகர்கள் பலரை உருவாக்கிய பெருமையை கொண்டவர் முத்துலிங்கம். திரைகடலோடி திரவியம் தேடியவர்களுக்கு மத்தியில், தேசம் விட்டு தேசம் ஓடி இலக்கியப்படைப்புகளைத் தந்தவர்கள் வரிசையில் இன்று முன்னணியில் இருப்பவர் முத்துலிங்கம். சியாரா லியோன், சூடான், பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான், கென்யா, சோமாலியா, என்று பல நாடுகளில் உலக

2 / 4

Written by - முருகபூபதி -
Sunday, 18 March 2018 08:50 - Last Updated Sunday, 18 March 2018 08:59

வங்கிக்காகவும் ஐக்கிய நாடுகள் சபைக்காகவும் வாழ்ந்தவர், தமது அலைந்துலைந்த வாழ்வை இலக்கியமாக சித்திரித்தது தமிழுக்கு வளமும் பூதிய பார்வையும் தந்தவர்.

பழந்தமிழ் இலக்கியங்கள் உடம்பட ஆங்கில இலக்கியங்களிலும் மிகுந்த பரிச்சியம் இவருக்கிருப்பது சிறந்த மனிதனம். அந்த மனிதனத்தை இலக்கிய வாசகர்களுக்கு சுவாரஸ்யத்துடன் பகிர்ந்தளிப்பதில் வெற்றி கண்டவர். அவர் ஓரு நஜீ ரிய எழுத்தாளரின் கதையில் பிரதான பாத்திரமாகி ஆபிரிக்க-பிரெஞ்சு இலக்கிய வாசகர்களிடமும் அறிமுகமாகியிருக்கும் விந்தயை தமிழுலகிற்கு தரியிபடுத்தியவர் ஷோபா சக்தி. முத்துலிங்கத்தை கதாபாத்திரமாக்கி திரு.முடுலிங்க என்ற சிறுகதயை நஜீ ரிய எழுத்தாளர் மம்முடு ஸாதி என்பவர் ஆபிரிக்காவின் ஹௌஸ மொழியில் எழுதியிருந்தார். .இந்தக் கதயை ஹீ ரன் வில்பன் என்பவர் பிரெஞ்சு மொழிக்குபயர்க்க, அதனை, ஓரு ஆபிரிக்க இலக்கிய சிறப்பிதழில் படித்த ஷோபாசக்தி, தமிழுக்குத் தந்தார். பல இணையை இதழ்களில் இதனபை படிக்க முடிந்தது. முத்துலிங்கம் ஆபிரிக்க நாடொன்றில் ஐ.நா.வுக்கான அலுவலகம் ஒன்றில் பணியாற்றிய காலத்தில் அவரிடம் சிற்றுழியராகப் பணியாற்றியவர்தான் இந்த மம்முடு ஸாதி. இவர், இதுவரயில் மூன்று கததை தொகுப்புகளையும் வளியிட்டிருப்பதாக ஷோபாசக்தி தகவல் வளியிட்டுள்ளார்.

தமிழக ஜனரஞ்சக சஞ்சிகயொன்றில் முத்துலிங்கம் குறித்து விதந்து எழுதப்பட்டதபை பார்த்தவுடன், மல்லிகை ஆசிரியர் தமது தூண்டில் களே்வி-பதில் பகுதியில், மிகுந்த உற்சாகமுடன் எம்மவர் ஓருவருக்கு கிடைக்கப்பறெ்ற சிறந்த அங்கீ காரம் என்ற தொனியில் எழுதியிருந்தது இச்சந்தர்ப்பத்தில் நினவைுக்கு வருகிறது.

பூமியின் பாதி வயது கட்டுரதை தொகுப்பு தொடர்பாக உயிர்மை பதிப்பகம் தரும் பின்வரும் குறிப்பு முத்துலிங்கத்தின் எழுத்துலகம் பற்றிய கணிப்பை விளக்குகிறது:- நவீ னத் தமிழ் உரநைடகைக்கு ஓரு பூதிய பரிமாணத்தயையும் வசீ கரத்தயையும் சரே்த்தவை அ.முத்துலிங்கத்தின் எழுத்துக்கள். வாழ்வின் வியப்பும் நகெழ்ச்சியும் கொண்ட தருணங்களை மிக நரே்த்தியான காட்சிகளாக்கும் இவரது கட்டுரகைள் வாசிப்பின் தீ ராத இன்பத்தை நஞ்சில் பரெுகச்சயெ்கின்றன. அன்றாட வாழ்வின் சின்னஞ்சிறிய அழகுகளும் அபத்தங்களும் முத்துலிங்கத்தின் தூல்லியமான, அங்கதம் மிகுந்த மொழியின் வழியே வகெு நரே்த்தியாக காட்சிப்படுத்தப்படுகின்றன. தீ விர உலக இலக்கிய வாசிப்பிலிருந்தும் பூலம் பயெர்ந்த வாழ்வின் பரந்தபட்ட அனுபவங்களிலிருந்தும் எழுதப்பட்ட இக்கட்டுரகைள் ஓரு பிரம்மாண்டமான களத்தை உருவாக்குகின்றன. ஓரு தமிழ் எழுத்தாளனுக்கு வகெு அப்ரவமாகவே சாத்தியமாகும் களம் இது. உண்மகை்கும் பூனவைுக்கும் இடயைே உள்ள மங்கலான கோட்டை மாற்றிலுமாகவே அழித்துவிடும் முத்துலிங்கம், தான் தொடுகின்ற ஓவ்வொன்றயைும் ஓரு அனுபவமாகத் திறந்து விடுகிறார்.

கனடாவிலிருந்துகொண்டு அவ்வப்போது அமரிக்காவுக்கு பயணித்தவாறு அதிகாலை எழுந்து கணனியில் படித்தும் கணனியில் எழுதியும், தனது சிந்தனகைளுக்கோ எழுத்துக்கோ ஓய்வு கொடுக்காமல் அயர்வின்றி இயங்கும், இவரது எழுத்துக்களபை படிக்கும் தருணங்களில் வாய்விட்டுச் சிரிக்கலாம். சிலிர்ப்பூடன்

எழுத்தாளர் அ .முத்துலிங்கம் பற்றியொரு நனவிடை தோய்தல் !

Written by - முருகபூபதி -
Sunday, 18 March 2018 08:50 - Last Updated Sunday, 18 March 2018 08:59

சிந்திக்கலாம்.

வாசகனை கவர்ந்திழுக்கும் மந்திரசக்தி இவரிடம் எப்படி வந்தது என்று அடிக்கடி நான் நினைப்பதுண்டு. இலக்கியத்தில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாக சிறுபான்மை இனங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் - போராட்டங்கள் தொடர்பாகவும் விசாலமான பார்வையைக்கொண்டவர் என்பதை கடந்த 2008 டிசம்பரில் அவர் தீராநதிக்கு வழங்கிய நேர்காணலிலிருந்து புரிந்துகொள்ள முடியும். அவரது கருத்துக்கள் விமர்சனத்துக்கும் விவாதத்துக்குமுரியவை என்பதனால்தானோ தெரியவில்லை, கொழும்பு தினக்குரல் ஞாயிறு இதழும் மறுபிரசுரம் செய்திருக்கிறது. ஒரு முழுமையான இலக்கியவாதியிடம் இப்படியாக சர்வதேச அரசியல் கண்ணோட்டம் இருப்பதும் அபூர்வம்தான்.

ஒரு ஆங்கில இலக்கிய வாதியையும் படைப்பையும் அறிமுகப்படுத்தும்போதிலும் சரி- கிட்டுவிடமிருந்த குரங்குகளைப்பற்றிச்சொல்லும்போதும் சரி- பல எழுத்தாளர்களிடமிருந்து கட்டுரைகளைத் தருவித்து தொகுத்து தருகையிலும் சரி- நாட்டியப்பேரொளி பத்மினியை தனது வீட்டு விருந்தாளியாக வைத்திருந்து உபசரித்து உரையாடியபொழுதும் சரி- தனது சகோதரி; சங்கீத வகுப்பில் பயின்ற கோலத்தை சித்திரிக்கும்போதும் சரி அவருக்கே உரித்தான நளினத்துடனும் அங்கதச்சுவையுடனும் வாசகர்களுடன் பேசுவார். அவரது எழுத்துக்களைப்படிக்கும் பொழுது நாம் அவர் அருகே இருப்பது போன்ற உணர்வுதான் ஏற்படும்.

முத்துலிங்கத்தை பற்றி எழுதுவதற்கு சில பக்கங்கள் போதாது. அவரது வாழ்வையும் இலக்கியப்பணியையும் விரிவாக பெரிய நூலாகவே எழுத முடியும். இந்த ஆக்கத்தின் ஆரம்பத்தில் முத்துலிங்கம் அவர்களின் கூற்றாக பதிவுசெய்யப்பட்டிருப்பது போன்று, அவரது ஒரு படைப்பை படித்த பின்பும் அந்தப்படைப்பு சில கணங்களுக்கு சில நாட்களுக்கு சில வருடங்களுக்கு எங்களுடன் தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும். அப்படி எங்களுடன் வந்துகொண்டேயிருப்பவர்தான் முத்துலிங்கம்.

- நன்றி : மல்லிகை 2009 மார்ச் -

letchumananm@gmail.com

4 / 4